# வங்கக் கடலில் இன்று உருவாகிறது 'மிதிலி' புயல்: தமிழகத்தில் 6 நாள்கள் பலத்த மழைக்கு வாய்ப்பு

**சென்னை, நவ. 16:** வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வெள்ளிக்கிழமைக்குள் (நவ. 17) புயலாக வலுப்பெறும்.

இதன் காரணமாகவும், இலங்கை அருகே நிலைகொண்டுள்ள வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாலும் தமிழகத்தில் 6 நாள்களுக்கு (நவ.17–22) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பு: மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வியாழக்கிழமை (நவ. 16) காலை 5.30 மணியளவில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, விசாகப்பட்டினத்தில் இருந்து சுமார் 420 கி.மீ. கிழக்கு தென்கிழக்கே நிலைகொண்டுள்ளது.

இது வடக்கு – வடகிழக்கு திசையில் நகர்ந்து வெள்ளிக்கிழமை (நவ. 17) புயலாக வலுப்பெற்று சனிக்கிழமை (நவ. 18) அதிகாலை வங்கதேச கடற்கரையை யொட்டி நகர்ந்து மோங்லா–கேப்புபாராவு பகுதிகளுக்கு இடையே கடக்கக்கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் புயலுக்கு 'மிதிலி' என்று பெயர் சூட்டப்படும். இந்தப் பெயரை மாலத்தீவு பரிந்துரைத்துள்ளது.

இதற்கிடையே, தென்மேற்கு வங்கக் கடல், இலங்கையையொட்டி, வங்கக் கடலில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வெள்ளி முதல் புதன் வரை (நவ.17–22) பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

குறிப்பாக, வெள்ளிக்கிழமை (நவ. 17) கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலும், ஞாயிற்றுக்கிழமை (நவ. 19) கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளிக்கிழமை (நவ. 17) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி 80, கன்னியாகுமரி மாவட்டம் சிவலோகம் 70, தக்கலை 60, திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி 50. மி.மீ. மழை பதிவானது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** வடமேற்கு, வடகிழக்கு வங்கக் கடல், மேற்கு வங்க கடலோரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை (நவ. 17) சூறாவளிக் காற்று மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். மத்திய வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 55 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். எனவே, மீனவர்கள் அந்தப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் என்.சங்கரய்யா உடல் தகனம்

**சென்னை, நவ.16:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான என்.சங்கரய்யாவின் உடல், 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் சென்னை பெசன்ட் நகர் மயானத்தில் வியாழக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

வயது முதிர்வு காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த சங்கரய்யா, சென்னையில் புதன்கிழமை காலமானார். அவரது உடல் குரோம்பேட்டையில் உள்ள இல்லத்திலும், பின்னர் தியாகராய நகரில் உள்ள மார்க்சிஸ்ட் மாநிலக் குழு அலுவலகத்திலும் வைக்கப்பட்டது. அரசியல் கட்சியினர், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். முன்னதாக, தனியார் மருத்துவமனையில் என்.சங்கரய்யா காலமான செய்தியை அறிந்த முதல்வர் ஸ்டாலின், நேரில் சென்று அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். அரசு மரியாதையுடன் என்.சங்கரய்யா இறுதி நிகழ்வு நடைபெறும் என்றும் முதல்வர் அறிவித்தார்.

இந்த நிலையில், சங்கரய்யா உடல் வியாழக்கிழமை தியாகராய நகரிலிருந்து பெசன்ட் நகர் மாநகராட்சி மயானம் நோக்கி வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அடையாறு பணிமனை அருகே சென்றவுடன், அங்கிருந்து அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் முன்னே அணிவகுக்க, செஞ்சட்டை தொண்டர்கள் பேரணியுடன் என்.சங்கரய்யா உடல் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.



சென்னை பெசன்ட்நகர் மாநகராட்சி மின்மயானத்தில் என்.சங்கரய்யாவின் உடலுக்கு 30 குண்டுகள் முழங்க வியாழக்கிழமை அளிக்கப்பட்ட அரசு மரியாதை.

மயானத்தில், மார்க்சிஸ்ட் மாநிலச் செயலர் கே.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் அனைத்துக் கட்சி தலைவர்கள் பேசினர். சங்கரய்யா உடலுக்கு மார்க்சிஸ்ட் தேசிய பொதுச் செயலர் சீதாராம் யெச்சூரி, அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் பிரகாஷ் காரத், ஜி.ராமகிருஷ்ணன், அசோக் தாவ்லே, கேரள மாநிலச் செயலர் கோவிந்தன் மாஸ்டர், மத்தியக் குழு உறுப்பினர் பி.கே.ஸ்ரீமதி உள்ளிட்டோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து, 30 குண்டுகள் முழங்க சங்கரய்யா உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

இரங்கல் கூட்டத்தில், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தமிழச்சி தங்கபாண்டியன், மு.சண்முகம் எம்.பி. (தொமுச), மதிமுக பொதுச்செயலர் வைகோ, விசிக தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகிதீன், நவாஸ்கான் எம்.பி., தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வி.தங்கபாலு, தி.க. தலைவர் கி.வீரமணி, தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன், அமமுக துணை பொதுச் செயலர் ஜி.செந்தமிழன், சிறுடியு தேசிய துணைத் தலைவர் ஏ.கே.பத்மநாபன், தேசியச் செயலர் ஆர்.கருமலையான், மாநிலத் தலைவர் அ.சௌந்தரராசன், பொதுச் செயலர் ஜி.சுகுமாரன், ஆதித் தமிழர் கட்சி மாநிலத் தலைவர் கு.ஜக்கையன், மார்க்சிஸ்ட் புதுவை பிரதேச செயலர் ஆர்.ராஜாங்கம், மூத்த தலைவர் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தமிழரின் புலம்பெயர்வுகள்!



முனைவர் மலையமான்

**இலங்கையில் சிங்களவர், தமிழர்களைக் கொன்று குவித்தனர். எஞ்சியிருந்தோர் பல நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். முன்பு மியான்மருக்கு (பர்மாவுக்கு) தமிழர்கள் போனார்கள். ஆனால், உள்நாட்டுக் குழப்பம் காரணமாக, அவர்கள் தரை வழியாக நடந்து தாயகம் திரும்பினார்கள்.**

கட்டுரையாளர்:
பதிப்பாசிரியர் (ஓய்வு),
தமிழ்வளர்ச்சி இயக்கம், சென்னை.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஆயுதக் குறைப்பின் அவசியம்

மா. இராமச்சந்திரன்

போரினால் விளையக் கூடிய அழிவை முன்னரும் பார்த்திருக்கிறோம். இப்போது நடைபெறும் ஹமாஸ் - இஸ்ரேல் போரிலும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால் போர் என்பது அழிவைத் தரக்கூடியது என்பது தெளிவாகிறது. முன்னைக் காட்டிலும் இப்போது, போர்களினால் பேரழிவு ஏற்படுவதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஏனெனில் இப்போதுள்ள ஆயுதங்கள் பேரழிவைத் தரும் ஆற்றல் வாய்ந்தவை.

மேலும் இரு நாடுகளுக்கிடையே எழும் போரை, எளிதாகவும் கடந்துவிட முடிவதில்லை. ஏனெனில் அது உலகப் போர் மூளும் சூழலையும் உருவாக்கிவிடலாம். அப்படி ஒவ்வொரு நாடும் ஒன்றுக்கொன்று பிணைப்பாக ஏதோ ஓர் அமைப்பில் இணைந்துள்ளது. இதனால் உலகமக்கள் ஒருவித அச்ச உணர்விலேயே வாழ வேண்டியுள்ளது.

எல்லை பிரச்னை, எல்லை கடந்த தீவிரவாதம் போன்றவை போருக்குக் காரணமாகின்றன. ஆயுதங்களின் பெருக்கமும், வலிமையும் அதற்குத் துணைபுரிகின்றன. ஆயுதம் வைத்திருக்கும் நாடு சும்மா இருக்காது. இதனைத்தான் உலகப்போர்கள் நமக்கு உணர்த்துகின்றன.

உலக அமைதியை நிலைநாட்ட உருவான சர்வதேச சங்கமும் (1920), ஐக்கிய நாடுகள் சபையும் (1945) ஆயுதக் குறைப்பை வெகுவாக வலியுறுத்தின. உலக அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதும் நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்ப்பதும் இவற்றின் நோக்கமாகும்.

போரில்லாத உலகில்தான் அமைதி, பாதுகாப்பு, நட்புறவு ஆகியவை இருக்கும் என்று இவை கருதின. அதற்கு ஆயுதமின்மை அவசியம் என நம்பின. அதன் அடிப்படையிலே ஆயுதக் குறைப்பு, ஆயுதத்தை முற்றிலுமாக ஒழித்தல் ஆகியவற்றை வலியுறுத்தின.

ஆனால் இன்றுவரை அது பேச்சளவில் இருக்கிறதே தவிர எந்த நாடும் இதனைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டே இருக்கின்றன. அதனால் போர் அபாயமும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

மன்னராட்சிக் காலத்தில் தமது நாட்டைப் பாதுகாக்கவும் தமது நிலப்பரப்பை விரிவு படுத்தவும் பலம் வாய்ந்த படைகள் தேவைப்பட்டன. முடியாட்சி மறைந்து மக்களாட்சி மலிந்து உலக மக்கள் யாவரும் ஒன்று என்றெண மனித நேயம் பேசும் இந்த நாளிலும் படை பலம் தேவையென்று நினைப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

உள்நாட்டில் ஏற்படும் கலவரங்களை ஒடுக்குவதற்கும், வெளிநாட்டோடு ஏற்படும் எல்லை பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் ராணுவம் அவசியம் என்னும் நிலை உருவாகிவிட்டது. அதன் காரணமாக உலக நாடுகள் ராணுவத்தைப் பலப்படுத்தும் செயல்களில் இறங்கிவிட்டன.

ராணுவ பலம் வாய்ந்த நாடுதான் வளர்ச்சியடைந்த நாடு என்னும் எண்ணமும் இங்கே உருவாகி விட்டது. இதனால் சிறு நாடுகள் கூட ஆயுதங்களைப் பெருக்கும் வகையில் ராணுவத்திற்கான செலவை அதிகரித்துவிட்டன. வளர்ந்த நாடுகள் என்று சொல்லக் கூடியவை ஆயுத வியாபாரத்தையும் வளர்த்துக் கொண்டன.

காந்திய சிந்தனையான அகிம்சைக்கும் ஆயுதக் குறைப்புக்கும் தொடர்பு உண்டு. வன்முறையும் ஆயுதமும் எந்த பிரச்னைக்கும் நிலையான தீர்வைத் தராது. அது ஏதோ ஒருபக்கத்தில் வன்மத்தைத்தான் வளர்க்கும். அது நீறுபூத்த நெருப்பாக இருந்து இன்னொரு நாளில் பற்றி எரியத் தொடங்கி, அழிவை உண்டாக்கிவிடும்.

ஆயுதபலத்தைவிட ஆன்ம பலமே வலிமை வாய்ந்தது என்பதும் அதுவே உண்மையான பலம் என்பதும் அகிம்சைவாதிகளின் நம்பிக்கை. ஆயுதங்களைவிட அன்பு நெறியே ஆற்றல் வாய்ந்தது. அந்த வகையில் ஆயுதங்களை விடுத்து அறநெறியில் சென்றால் உலகில் அமைதி திகழும் என்பது அகிம்சைக் கோட்பாடு.

ஆனால் அதனையெல்லாம் புறம் தள்ளிவிட்டு, ராணுவத்தையும் ஆயுதபலத்தையும் பெருக்கும் போக்கு இப்போது பெருகி வருகிறது. இது தற்காப்புக்கான செயல் என்று சொல்லப்படுகிறது. மற்ற நாடுகளை நம்பாத, ஒருவகை பயத்தினால் உண்டாகும் செயல் இது. இப்போது எல்லா நாட்டுக்குமே இந்த பயம் உள்ளது.

'உள்நாட்டுப் பாதுகாப்புக்கு வேண்டுமானால், ராணுவம் என்பதற்கு பதிலாக சாந்தி சேனை என்னும் அமைதிப் படை இருக்கலாம்' என்பது வினோபாஜி போன்ற காந்தியவாதிகளின் விருப்பம். பிரச்னைகள் எழும்போது அதனைப் பேசித்தீர்த்து ஒற்றுமையை வளர்ப்பது இதன் நோக்கம்.

உள்நாட்டில் மட்டுமல்லாது இருநாடுகளுக்கிடையேயும் இதன் செயல்பாடு இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். இதன் மூலம் ராணுவத்திற்காகும் செலவை நாட்டின் ஆக்கப் பணிகளுக்குச் செலவிட முடியும்.

அண்ணன் - தம்பிகளுக்கிடையே பிரச்னைகள் இருக்கும்போது, இரு நாடுகளுக்கிடையே பிரச்னைகள் எழுவது தவிர்க்க முடியாதுதான். அந்த பிரச்னைகளைப் பேசித் தீர்க்க முயலாமல் பயங்கரவாதத்தால் தீர்க்க நினைக்கும் மனநிலை இன்று அதிகரித்துள்ளது. போரையும் பயங்கரவாதமாகத்தான் கருத முடியும்.

நாடுபிடிக்கும் ஆசையில் மூண்ட பழங்காலப் போர்களில் கூட ஒரு நெறிமுறை இருந்தது. அது பொதுமக்களைப் பலி கொண்டதில்லை. அந்த மனிதாபிமானம் கூட இப்போதைய போர்களில் பின்பற்றப்படவில்லை என்பது வேதனைக்குரியது.

இப்போதும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம் போர் விதியைமீறி, சர்வதேச சட்டங்களுக்கு எதிராக நடைபெறும் செயல்களைக் கண்டிக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் மருத்துவமனை, புகலிடம், அப்பாவி மக்கள் குடியிருப்பு என்று எல்லா இடங்களிலும் நாசகார ஆயுதங்களை இரவும் பகலுமாக அள்ளிவீசி, குழந்தைகள், முதியோர் என்று எல்லோரையும் கொல்லும் வெறி தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறது.

இதற்கெல்லாம் ஆயுதப் பெருக்கமே காரணம். அழிவைத் தவிர்த்து உலக அமைதியைப் பேணுவதற்கு ஆயுத ஒழிப்பு அவசியமாகும். அது உடனே இயலாத நிலையில் ஆயுதக் குறைப்பையாவது உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

# 13-ஆவது தேசிய ஆடவர் ஹாக்கி சென்னையில் இன்று தொடக்கம்

**சென்னை, நவ. 16:** ஆடவருக்கான 13-ஆவது தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப், சென்னையில் வெள்ளிக்கிழமை (நவ. 17) தொடங்குகிறது.

எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் வரும் 28-ஆம் தேதி வரை நடைபெற இருக்கும் இப்போட்டியில், பல்வேறு மாநிலங்களில் இருந்து 28 அணிகள் பங்கேற்கின்றன. ஒருநாளில் காலை முதல் மாலை வரை 4 அல்லது 5 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

முதல் நாள் ஆட்டங்களில் தமிழ்நாடு - அஸ்ஸாம், பஞ்சாப் - திரிபுரா, மத்திய பிரதேசம், மணிப்பூர், மகாராஷ்டிரம் - உத்தரகண்ட் அணிகள் மோதுகின்றன. லீக் மற்றும் நாக்அவுட் சுற்று முறையில் நடைபெறும் இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 3 புள்ளிகளும், டிரா ஆகும் பட்சத்தில் இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளிகளும் வழங்கப்படவுள்ளது.

போட்டி தொடர்பாக, சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், ஹாக்கி இந்தியா பொருளாளரும், தமிழ்நாடு ஹாக்கி சங்க தலைவருமான மனோகரன், இந்திய, தமிழ்நாடு ஹாக்கி வீரர் கார்த்தி, ஹாக்கி சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அப்போது பேசிய தமிழ்நாடு ஹாக்கி சங்கத் தலைவர் மனோகரன், 'தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழக அரசின் ஆதரவுடன் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. இதுவரை நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் இந்திய அணி வீரர்கள் பங்கேற்றதில்லை. அவர்கள் இதில் விளையாட வேண்டியதுகட்டாயமல்ல. இருப்பினும், இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்ப்ரீத் உள்பட பல இந்திய வீரர்கள் இப்போட்டியில் இந்த முறை விளையாடுகின்றனர். சில இந்திய வீரர்கள் காயம் காரணமாக இதில் கலந்துகொள்ளவில்லை. இந்திய அணி வீரர்களுடன் விளையாடுவது தமிழ்நாடு வீரர்கள் உள்பட அனைத்து வீரர்களும் தங்கள் ஆட்டத்திறனை மேம்படுத்திக் கொள்ள நல்ல வாய்ப்பாகவும், அனுபவமாகவும் இருக்கும்.

| அணிகள் | |
|---|---|
| குரூப் 'ஏ' | ஹரியாணா, சத்தீஸ்கர், குஜராத். |
| குரூப் 'பி' | தமிழ்நாடு, ஹிமாசல பிரதேசம், அஸ்ஸாம். |
| குரூப் 'சி' | கர்நாடகம், பிகார், தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் டையு. |
| குரூப் 'டி' | மகாராஷ்டிரம், பஞ்சாப், உத்தரகண்ட். |
| குரூப் 'இ' | மேற்கு வங்கம், மத்திய பிரதேசம், ஜம்மு & காஷ்மீர், மணிப்பூர். |
| குரூப் 'எஃப்' | ஜார்க்கண்ட், சண்டீகர், கோவா, ஆந்திர பிரதேசம். |
| குரூப் 'ஜி' | உத்தர பிரதேசம், புதுச்சேரி, கேரளம், ராஜஸ்தான். |
| குரூப் 'ஹெச்' | தில்லி, ஒடிஸா, தெலங்கானா, அருணாசல பிரதேசம். |

இந்தப் போட்டியில் 522 வீரர்கள், 25 அலுவலர்கள் பங்கேற்கின்றனர். கடந்த முறை தமிழ்நாடு அணி இரண்டாமிடம் பெற்றது. இம்முறையும் தமிழ்நாடு அணி நிச்சயம் முதல் மூன்று இடங்களுக்குள்ளாக வரும். ஆசிய சாம்பியன்ஷிப்பில் சிறப்பாக விளையாடிய கார்த்திக், ஜூனியர் இந்திய அணி வீரர் சதீஷ் ஆகியோர் இப்போட்டியில் தமிழ்நாடு அணியில் ஆட உள்ளனர்' என்றார்.

தமிழ்நாடு ஹாக்கி வீரர் கார்த்தி பேசுகையில், 'தமிழ்நாடு அணி சிறப்பாக உள்ளது. இந்திய அணி வீரர்களில் பலர், இப்போட்டிக்காக தமிழகம் வருகின்றனர்.

போட்டி விறுவிறுப்பாக செல்லும். ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியில் இடம் பெற தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். இந்திய அணியில் இடம்பெற நிறைய வாய்ப்பு உள்ளது. மற்ற அணி வீரர்களுடன் தமிழ்நாடு வீரர்கள் இணைந்து விளையாடும் போது அவர்களுக்கு அது ஊக்கமளிப்பதாகவும், ஆட்டத்திறனை மேம்படுத்துவதாகவும் இருக்கும்' என்றார்.